## தமிழ்நாட்டில் சிறு, குறு

# விவசாயிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

## மக்களவையில் எஸ். ஜெகத்ரட்சகன் கேள்வி!



புதுடெல்லி, ஜுலை 30–

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன், ஜுலை 28, 2026 அன்று மக்களவையில், தீவிர வெப்பநிலை, நீர்ப் பற்றாக்குறை மற்றும் பருவநிலை மாற்றங்களால் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் செயல்பாடு, இழப்பீடு வழங்கும் நடைமுறை, பயிர் சேத மதிப்பீட்டு முறை, தொழில்நுட்ப பயன்பாடு மற்றும் தமிழ்நாட்டில் சிறு, குறு விவசாயிகளுக்கான காப்பீட்டு பாதுகாப்பை மேம்படுத்தும் நடவடிக்கைகள் குறித்து கேள்வி எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய அரசின் வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை இணை அமைச்சர் ராம்நாத் தாக்கூர் அளித்த பதில் வருமாறு:

பிரதம மந்திரி பயிர்க் காப்பீட்டுத் திட்டம், மாநில அரசால் அறிவிக்கப்படும் பயிர்கள் மற்றும் பகுதிகளுக்கு, விதைப்பு முன்பிருந்து அறுவடைக்குப் பிந்தைய காலம் வரை விளைச்சல் அடிப்படையிலான முழுமையான காப்பீட்டுப் பாதுகாப்பை வழங்குவதாக அமைச்சர் தெரிவித்தார். வெள்ளம், நீர்மூழ்கல், நிலச்சரிவு, வறட்சி, கடும் வெப்ப அலை, ஆலங்கட்டி மழை, புயல், பூச்சி மற்றும் நோய்த் தாக்குதல், இயற்கைத் தீ, மின்னல், சூறாவளி உள்ளிட்ட தவிர்க்க முடியாத இயற்கைப் பேரிடர்களால் ஏற்படும் பரவலான விளைச்சல் இழப்புகளுக்கும், ஆலங்கட்டி மழை, நிலச்சரிவு, நீர்மூழ்கள், மேக வெடிப்பு மற்றும் இயற்கைத் தீ போன்ற உள்ளூர் பாதிப்புகளுக்கும், அறுவடைக்குப் பிந்தை புயல், பருவம் தவறிய மழை, ஆலங்கட்டி மழை மற்றும் விதைப்பு மேற்கொள்ள முடியாத சூழ்நிலைகளுக்கும் இத்திட்டம் காப்பீட்டுப் பாதுகாப்பு வழங்குவதாகவும் தெரிவித்தார்.

### பயிர்க் காப்பீட்டு பாதுகாப்பு!

மறுசீரமைக்கப்பட்ட வானிலை அடிப்படையிலான பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், அறிவியல் அடிப்படையில் வடிவமைக்கப்பட்ட அளவுகோல்களின் அடிப்படையில் தோட்டக்கலைப் பயிர்களுக்கு காப்பீடு வழங்கப்படு வதாகவும், மழைப் பொழிவு குறைவு அல்லது அதிகரிப்பு, அதிக அல்லது குறைந்த வெப்பநிலை, ஈரப்பதம் போன்ற வானிலை காரணிகளால் விளைச்சலில் ஏற்படும் பாதிப்புகளுக்கு காப்பீட்டுப் பாதுகாப்பு அளிக்கப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார். தேசிய பயிர்க் காப்பீட்டு இணையத் தளத்தில் இழப்பீட்டுத் தொகை

கணக்கிடப்பட்டு, காப்பீட்டு நிறுவனங்களுக்கு மானியத் தொகை கிடைத்த பின்னர் 21 நாட்களுக்குள் இழப்பீடு வழங்கப்பட வேண்டும் என திட்ட வழிகாட்டுதல்களில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றும் கூறினார். மாநில அரசின் மானியப் பங்கு தாமதமாக வழங்கப்படுதல், வங்கிகள் காப்பீட்டு விவரங்களை தவறாக அல்லது தாமதமாக சமர்ப்பித்தல், விளைச்சல் தரவு தொடர்பான முரண்பாடுகள் மற்றும் சரிபார்க்கப்படாத வங்கிக் கணக்குகள் போன்ற காரணங்களால் சில கோரிக்கைகள் நிலுவையில் இருப்பதாகவும், அவை தீர்வு காணப்பட்ட பின்னர் திட்ட விதிகளின்படி இழப்பீடு வழங்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

### தமிழ்நாட்டிலிருந்து எந்த அறிக்கையும் வரவில்லை!

தமிழ்நாடு அரசின் தகவலின் படி, அண்மைக் காலங்களில் கடும் வெப்ப அலை அல்லது நீர்ப் பற்றாக்குறை காரணமாக பயிர் சேதம் ஏற்பட்டதாக எந்த அறிக்கையும் பெறப்படவில்லை என்று அமைச்சர் தெரிவித்தார். இருப்பினும், தற்போதைய பருவத்திற்காக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் வறண்ட நில வேளாண்மை மத்திய ஆராய்ச்சி நிறுவனத்தின் தொழில்நுட்ப உதவியுடன் மாவட்ட வாரியான பயிர் அவசர காலத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அனைத்து மாவட்டங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளதாகவும், உழவன் செயலி மூலம் தினசரி வானிலை அறிவுரைகள் வழங்கப்படுவதாகவும், நீர் சேமிப்பு, வறட்சியைத் தாங்கும் பயிர் ரகங்கள், பயிர் பல்வகைப்படுத்தல், நுண்பாசனம், விதை நேர்த்தி, மண்ணின் ஈரப்பதத்தைப் பாதுகாக்கும் நடைமுறைகள் மற்றும் தகுதியான விவசாயிகளை பிரதம மந்திரி பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் சேர்த்தல் குறித்து களநிலை அறிவுரைகள் வழங்கப்பட்டு வருவதாகவும் கூறினார்.

மேலும், இந்திய வானிலை ஆய்வு மையத்தின் மழைப்பொழிவு மதிப்பீட்டின் அடிப்படையில் 19 பாதிப்பு வாய்ப்புள்ள மாவட்டங்கள் அடையாளம் காணப்பட்டு, மாவட்ட வாரியான அவசர கால நடவடிக்கைகள், பருவநிலைத் தாங்குதிறன் கொண்ட தொழில்நுட்பங்கள் மற்றும் பயிர் சார்ந்த ஆலோசனைகள் மூலம் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார். தீவிர வானிலைச் சவால்களை கருத்தில் கொண்டு, பிரதம மந்திரி பயிர்க் காப்பீட்டுத் திட்டம் மேலும் வலுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் கூறினார். பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தை திறம்பட செயல்படுத்தவும், விவசாயிகளின் பங்கேற்பை அதிகரிக்கவும், வெளிப்படைத்தன்மையை உறுதி செய்யவும் மற்றும் இழப்பீட்டை உரிய காலத்தில் வழங்கவும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரி வித்தார்.

தேசிய பயிர்க் காப்பீட்டு இணையத் தளம், மானியத் தொகை வழங்குதல், விவசாயிகளை இணையவழியில் பதிவு செய்தல், காப்பீடு செய்யப்பட்ட விவசாயிகளின் விவரங்களை பதிவேற்றம் செய்தல் மற்றும் இழப்பீட்டுத் தொகையை நேரடியாக விவசாயிகளின் வங்கிக் கணக்கில் செலுத்துதல் ஆகியவற்றுக்கான ஒருங்கிணைந்த தளமாக உருவாக்கப்பட்டுள்ளது. 2022 கரீப் பருவம் முதல் 'டிஜிகிளெய்ம்' இணையவழி இழப்பீட்டு மேலாண்மை முறை செயல்படுத்தப்பட்டு, தேசிய பயிர்க் காப்பீட்டு இணையத் தளம், பொது நிதி மேலாண்மை முறை மற்றும் காப்பீட்டு நிறுவனங்களின் கணக்கியல் அமைப்புகள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் இழப்பீட்டு கோரிக்கைகள் விரைவாகவும் வெளிப்படையாகவும் பரிசீலிக்கப்படுகின்றன.

### 'யெஸ்டெக்'கில் விளைச்சல் மதிப்பீடு!

2024 கரீப் பருவம் முதல், காப்பீட்டு நிறுவனம் இழப்பீட்டை காலதாமதமாக வழங்கினால் 12 சதவீத அபராதம் தானாக விதிக்கப்படுகிறது. 2025 கரீப் பருவம் முதல், மாநில அரசு தனது மானியப் பங்கை தாமதமாக வழங்கினாலும் 12 சதவீத அபராதம் விதிக்கப்படுகிறது. மேலும், மாநில அரசுகள் தங்களது மானியப் பங்கை முன்கூட்டியே செலுத்துவதற்காக எஸ்க்ரோ கணக்கைத் தொடங்குவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப பயன்பாட்டை அதிகரிக்கும் நோக்கில், பயிர் அறுவடைப் பரிசோதனை செயலி மூலம் பயிர் அறுவடைப் பரிசோதனைகளின் விளைச்சல் தரவுகள் உடனுக்குடன் பதிவேற்றம் செய்யப்படுவதற்கான வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும், காப்பீட்டு நிறுவனங்கள் நேரடியாக பயிர் அறுவடைப் பரிசோதனைகளைப் பார்வையிடும் வசதி உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், மாநிலங்களின் நிலப் பதிவேடுகள் தேசிய பயிர்க் காப்பீட்டு இணையத் தளத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டு, காப்பீடு செய்யப்பட்ட நில விவரங்களை துல்லியமாக உறுதிப்படுத்தும் நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் கூறினார். 'யெஸ் டெக்' தொழில்நுட்ப அடிப்படையிலான விளைச்சல் மதிப்பீட்டு முறை மூலம் தொலை உணர்திறன் தொழில்நுட்பம், செயற்கைக்கோள் படங்கள் மற்றும் பிற நவீன தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டு விளைச்சல் மதிப்பீடு மேலும் துல்லியமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

மேலும், உள்ளூர் இயற்கைப் பேரிடர்கள் மற்றும் அறுவடைக்குப் பிந்தைய சேதங்களை தனிப்பட்ட விவசாய நில அளவிலேயே மதிப்பிடுவதற்காக 'கிளாப்' "பயிர் இழப்பு மதிப்பீட்டுச் செயலி உருவாக்கப்பட்டு, இத்திட்டத்தை செயல்படுத்தும் அனைத்து மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களும் அதைப் பயன்படுத்துவது கட்டாய மாக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

விவசாயிகளிடம் சிறு மற்றும் குறு விவசாயிகளின் காப்பீட்டு பாதுகாப்பை அதிகரிக்கும் நோக்கில், 'ஏய்ட்' விவசாயிகள் இணையவழிப் பதிவு செயலி மூலம் வீடு தேடி விவசாயிகளை இணையவழியில் பதிவு செய்யும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும், மாநில அரசுகள், காப்பீட்டு நிறுவனங்கள், நிதி நிறுவனங்கள் மற்றும் பொது சேவை மையங்கள் வாயிலாக திட்டம் குறித்த விழிப்புணர்வு தொடர்ந்து ஏற்படுத்தப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

2021 கரீப் பருவம் முதல், ஆண்டுதோறும் பயிர்க் காப்பீட்டு வாரம் மற்றும் கிராம அளவில் பயிர்க் காப்பீட்டு பாடசாலைகள் நடத்தப்பட்டு வருவதாகவும், "எனது காப்பீட்டு ஆவணம் என் கையில் என்ற நாடு தழுவிய சிறப்பு இயக்கத்தின் மூலம் பயிர்க் காப்பீட்டு ஆவணங்கள் நேரடியாக வழங்கப்பட்டதாகவும் கூறினார். தேசிய மற்றும் உள்ளூர் நாளிதழ்கள், தொலைக்காட்சி, குறுஞ்செய்திகள், உள்ளூர் மொழித் தகவல் பொருட்கள் மற்றும் இணையவழிப் பயிலரங்குகள் மூலமும் விவசாயிகளிடம் தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

### மிக நுணுக்கமான வானிலை தகவல்கள்!

2023–24 முதல், பயிர் சேதத்தை துல்லியமாக மதிப்பிடுவதற்காக 'யெஸ் டெக்' தொழில்நுட்ப அடிப்படையிலான விளைச்சல் மதிப்பீட்டு முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும், கரீப் 2023 முதல் நெல் மற்றும் கோதுமை பயிர்களின் விளைச்சல் மதிப்பீட்டில் 30 சதவீத பங்கு இந்த முறையின் மூலம் கட்டாயமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார். கரீப் 2024 முதல் சோயாபீன் பயிரும் இந்த முறையின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் கூறினார். மேலும், 'விண்ட்ஸ்' வானிலைத் தகவல் வலையமைப்பு மற்றும் தரவு முறை மூலம் தானியங்கி வானிலை நிலையங்கள் மற்றும் தானியங்கி மழைமானிகளின் எண்ணிக்கை தற்போதைய அளவை விட ஐந்து மடங்கு அதிகரிக்கப்பட்டு, கிராம ஊராட்சி மற்றும் ஒன்றிய அளவில் மிக நுணுக்கமான வானிலைத் தகவல்கள் சேகரிக்கப்பட்டு, இந்திய வானிலை ஆய்வு மையத்துடன் ஒருங்கிணைக்கப்பட்ட தேசிய தரவுத்தளத்தில் பகிரப்பட்டு வருவதாக வும் தெரிவித்தார்.

இந்த முறை, 'யெஸ்டெக்' தொழில்நுட்ப அடிப்படையிலான விளைச்சல் மதிப்பீட்டு முறைக்குத் தேவையான தரவுகளை வழங்குவதுடன், வறட்சி மற்றும் பேரிடர் மேலாண்மை, துல்லியமான வானிலை முன்னறிவிப்பு மற்றும் மேம்பட்ட அளவுரு அடிப்படையிலான பயிர்க் காப்பீட்டுத் திட்டங்களை உருவாக்குவதற்கும் பெரிதும் உதவுவதாக அமைச்சர் கூறினார்.

கடந்த ஐந்து ஆண்டுகளில், தமிழ்நாட்டில் மொத்தம் 63,01,180 விவசாயிகள் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும், இதில் 55,83,255 சிறு விவசாயிகளும், 5,38,036 குறு விவசாயிகளும் இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவித்தார். இதே காலகட்டத்தில் 3,630.63 கோடி மதிப்பிலான இழப்பீட்டு கோரிக்கைகள் பதிவு செய்யப்பட்ட நிலையில், 3,595.48 கோடி இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதாகவும், இதில் சிறு விவசாயிகளுக்கு 3,059.57 கோடியும், குறு விவசாயிகளுக்கு 3351.47 கோடியும் வழங்கப்பட்டுள்ளதாகவும் ஒன்றிய அரசின் வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை இணை அமைச்சர் ராம்நாத் தாக்கூர் அவர்கள், எழுத்துப்பூர்வமாக அளித்த பதிலில் தெரிவித்துள்ளார்.

# ஒழுங்கு நடவடிக்கை

## தலைமைக் கழக அறிவிப்பு!

மும்பை மாநகர் மாநிலக் கழக பொறுப்புக்குழு உறுப்பினர் வே.ம.உத்தமன் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Sus pension) வைக்கப்படுகிறார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை 600 18.
நாள் :29.07.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தாழை மு. கருணாநிதி
### ஜுலை 30 (1986)



இளமைப் பருவம் முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டவர். தமிழக சட்டப்பேரவை உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினராக மக்களின் மகத்தான ஆதரவோடு தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

"மாவட்டச் செயலாளர்களில் தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்கே அதிக வாய்ப்புத் தரவேண்டும் என்பது எனது ஆசை! எனது சொந்த மாவட்டத்திலேயே அந்த ஆசை தாழை மு. கருணாநிதி மூலம் நிறைவேறியது. மாவட்டச் செயலாளர் பதவிக்கு தாம் எவ்வளவு பொருத்தமானவர் என்பதை தாழை தமது தொண்டால், உழைப்பால் நிரூபித்துக் காட்டினார்" என தலைவர் கலைஞர் அவர்களால் புகழப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## விருதுநகர் வடக்கு மாவட்டம் சிவகாசி மாநகரம்,

# 6வது பகுதிக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

விருதுநகர் வடக்கு மாவட்டம், சிவகாசி மாநகரம், 6வது பகுதிக் கழகச் செயலாளர் ஞானசேகரன் அவர்கள் தான் வகித்து வந்த பொறுப்பிலிருந்து விலகிக் கொண்டதால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, திரு.**எஸ்.பி.பி. விக்னேஷ்பிரபாகரன்** (104, தில்லை சிதம்பரம் தெரு, சிவகாசி, விருதுநகர் மாவட்டம்) அவர்கள் 6வது பகுதிக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை 600 18.
நாள் :29.07.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.



கழகத் தலைவர், தளபதியார் அவர்களின் நல்லாசியுடன், தமிழ்நாடு எதிர்க்கட்சி தலைவர், கழக இளைஞர் அணி செயலாளர் இளந்தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, விழுப்புரம் மத்திய மாவட்டம், விழுப்புரம் சட்டமன்றத் தொகுதி, காணை கிழக்கு ஒன்றியம், தெளி ஊராட்சியில் விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்ட புதிய அங்கன்வாடி கட்டிடத்தை, விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினரும், விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளருமான டாக்டர் இரா. இலட்சுமணன் திறந்து வைத்தார். உடன் காணை கிழக்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் கொத்தமங்கலம் B.சந்திரசேகரன், காணை ஒன்றிய குழு பெருந்தலைவர் கலைச்செல்வி மற்றும் ஒன்றிய பொறுப்புக்குழு உறுப்பினர்கள், மாவட்ட, ஒன்றிய சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## சென்னையில்

# அமைச்சரை முற்றுகையிட்ட மீனவப் பெண்கள்!

## கடும் வாக்குவாதம்!

சென்னை, ஜுலை.30-

மெரினா லூப் சாலையில் உள்ள மீன் அங்காடியால் எந்த பயனும் இல்லை என கூறி உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்ட மீனவ பெண்கள், அமைச்சர் வெங்கடரமணனுடன் கடும் வாக்குவாதம் செய்ததால் பரபரப்பு ஏற்பட்டது. சென்னை மெரினா கடற்கரையையொட்டிய நொச்சிக்குப்பம் லூப் சாலையில், முதல்வர் விஜய்யின் கவனத்தை ஈர்க்கும் வகையில் கங்கா பவானி அம்மன் கோயில் அருகே மீனவர்கள், மீன் வியாபாரிகள், பெண்கள், இளைஞர்கள் மற்றும் பல்வேறு மீனவ அமைப்புகளைச் சேர்ந்த நிர்வாகிகள் என பலர் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டனர். இதில், பல தலைமுறைகளாக கடலை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கும் மீனவ மக்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் வகையில் எந்தவிதமான திட்டங்களையும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தக்கூடாது என்று மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும், மாநகராட்சி சார்பில் கடந்த ஆண்டு பிரமாண்டமாக மீன் அங்காடி கட்டிக்கொடுக்கப்பட்டது. 2 ஏக்கர் பரப்பளவிலான அந்த இடத்தில் 50,000 சதுர அடியில் 360 கடைகள் கட்டப்பட்டுள்ளன. பொதுமக்கள் வாகனங்களை நிறுத்துவதற்கு தனி இடமும் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டு உள்ளது. மீன்களை வெட்டுவதற்கு தனி இடம் மற்றும் குடிநீர், கழிப்பிட வசதி, கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் ஆகியவையும் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டுள்ளன. மெரினா லூப் சாலையில் அமைக்கப்படுள்ள இந்த மீன் அங்காடியால் தங்களது வியாபாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அதனால் எந்த பயனும் இல்லை என்றும் மீனவர்கள் தற்போது தெரிவித்துள்ளனர். மீன் அங்காடி எங்களுக்கு வேண்டாம் என்றும் நாங்கள் கடற்கரை மணற்பரப்பிலேயே மீன் கடைகளை வைக்க அனுமதிக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

நவீன மீன் அங்காடியில் விற்பனை போதிய அளவில் நடப்பதில்லை. அதனால் நாங்கள் சாலையோரம் கடைகள் அமைத்து மீன் வியாபாரம் செய்ய அனுமதிக்க வேண்டும் என்பதே மீனவர்களின் கோரிக்கையாக உள்ளது. இதை வலியுறுத்தி நேற்று மீன்வர்கள் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுப்பட்டனர். மேலும், மீன் அங்காடியை இடித்து விட்டு அங்கு திருமண மண்டபம் கட்டித்தர வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்து போராட்டத்தில் ஈடுபட்டனர். மேலும் முறையான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டால் குலுக்கல் முறையில் மீனவர்களுக்கு மீன் அங்காடியில் கடைகள் ஒதுக்கப்படும் என மீனவளத்துறை சார்பில் கணக்கெடுப்பு பட்டியல் எடுக்கப் பட்டது.

இந்நிலையில் போராட்டம் தீவிரமாகிக் கொண்டிருந்த நேரத்தில், யாரும் எதிர்பாராதவிதமாக உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சரும், மயிலாப்பூர் தொகுதி எம்எல்ஏவுமான வெங்கடரமணன் போராட்ட களத்திற்கு நேரில் வந்தார். அவருடன் திருவொற்றியூர் எம்எல்ஏ செந்தில்குமார் உடனிருந்தார். அப்போது போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மீனவப் பெண்கள் அமைச்சரிடம் கோரிக்கை மனுவை அளித்தனர். மேலும் அங்கு சமுதாய கூடம் அமைத்து தரவேண்டும் என மீனவர்கள் கோரிக்கை விடுத்தனர். இதற்கு பதிலளித்த அமைச்சர், 'அப்படி எல்லாம் செய்து தர முடியாது,' என கூறினார். அமைச்சரின் இந்த பதிலால் அதிருப்தியடைந்த மீனவப் பெண்கள், அமைச்சரிடம் தொடர்ந்து கேள்வி எழுப்பினர். இதனால், அமைச்சருக்கும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மீனவப் பெண்களுக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

ஒரு கட்டத்தில் இருதரப்பினரும் தங்களது கருத்துகளை ஆவேசமாக முன்வைத்ததால், போராட்டக் களத்தில் பரபரப்பான சூழல் நிலவியது. நிலைமை மேலும் பதற்றமடையாமல் இருக்க, உடனிருந்த காவல்துறையினர் மற்றும் அதிகாரிகள் இருதரப்பினரையும் சமாதானப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டனர். இருப்பினும், மீனவ மக்களின் கோரிக்கைகளுக்கு உரிய தீர்வு கிடைக்கும் வரை போராட்டத்தை தொடரப்போவதாக போராட்டக்காரர்கள் தெரிவித்ததால், அப்பகுதியில் தொடர்ந்து பரபரப்பு நீடித்தது. பின்னர் நிருபர்களிடம் அமைச்சர் வெங்கடரமணன் கூறியதாவது: சமூக நலக்கூடத்தை வேறு இடத்தில் கட்டிக்கொள்ளலாம். மீன் அங்காடியில் உங்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் செய்து தரப்பட்டு, உங்களது வருவாயைப் பெருக்குவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும், என்றார்.

சுமார் அரை மணி நேரத்திற்கும் மேலாக நீடித்த பேச்சுவார்த்தையில் உடன்பாடு எட்டப்படாததால், அமைச்சர் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார். அமைச்சருடன் பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்ததை தொடர்ந்து, போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மீனவர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் பாஜ முன்னாள் மாநில தலைவர் தமிழிசை சவுந்தரராஜன், மாநில செயலாளர் சதீஷ்குமார் ஆகியோர் நேரில் வந்து மீனவர்களைச் சந்தித்து தங்களது ஆதரவை தெரிவித்தனர்.

# உதகை கிழக்கு நகர தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம்!

## கே.எம்.ராஜூ எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது!

உதகை. ஜுலை, 30-

உதகை கிழக்கு நகர தி.மு.க செயல்வீரர்கள் கூட்டம் YMCA கூட்ட அரங்கில் மாவட்ட கழக பொறுப்பாளர் குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் கே.எம்.ராஜூ தலைமையில் நடை பெற்றது.

நகரக் கழக செயலாளர் எஸ். ஜார்ஜ் வரவேற்றுப் பேசினார், மாவட்ட அவைத் தலைவர் போஜன், மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார், மாவட்ட பொருளாளர் நாசர் அலி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் இளங்கோவன், தம்பி இஸ்மாயில், உதகை நகரமன்றத் தலைவர் வானீஸ்வரி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில், உதகை கிழக்கு நகரத்திற்கு உட்பட்ட அனைத்து கிளைக் கழகங்களிலும் கழக கொடியேற்று விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிகள் நடத்துவது எனவும்,

உள்ளாட்சி தேர்தலில் நூறு சதவீதம் வெற்றி பெற அயராது உழைப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

கூட்டத்தில், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் மோகன் குமார், மகேஷ், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் முஸ்தபா, உதகை மேற்கு நகரக் கழக பொறுப்பாளர் ரமேஷ், நகர அவைத்தலைவர் ஜெயகோபி, நகர துணை செயலாளர்கள் கார்டன் கிருஷ்ணன், இச்சுபாய், ரீட்டா மேரி, நகரப் பொருளாளர் அனில் குமார், மாவட்ட பிரதிநிதிகள் வெங்கடேஷ், கார்த்திக் மற்றும் மாவட்ட அணிகளின் நிர்வாகி கள், நகர மன்ற உறுப்பினர்கள், கிளைக் கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள், கழக செயல் வீரர்கள், கலந்து கொண்டனர்.

கூட்டம் முடிவில் நகர அவைத்தலைவர் ஜெயகோபி நன்றி கூறினார்.